## முதல் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 60

தமிழ்

வகுப்பு - ஐந்து - ____________ நேரம்: 2மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:** **10 × 1 = 10**

1. பாடல் பாடினாள் - இத்தொடரில் இல்லை.______________
அ) எழுவாய் ஆ) பயனிலை இ) செயப்படுபொருள் ஈ) செயல்
2. கனியிடை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________
அ) கனி + யிடை ஆ) கணி + யிடை இ) கனி + இடை ஈ) கணி + இடை
3. அமர்ந்து + இருந்த - இதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ______________
அ) அமர்ந்திருந்த ஆ) அமர்ந்துஇருந்த இ) அமர்திருந்த ஈ) அமர்ந்துதிருந்த
4. இகழ் - இச்சொல்லின் எதிர்ச்சொல் ______________
அ) புகழ் ஆ) மகிழ் இ) திகழ் ஈ) தமிழ்
5. புரவி என்பதன் பொருள் ______________
அ) குதிரை ஆ) மீன் இ) கடல் ஈ) கண்கள்
6. புலியின் இளமைப்பெயர் ______________
அ) புலிப்பறழ் ஆ) புலிக்குட்டி இ) புலிக்கன்று ஈ) புலிப்பிள்ளை
7. பொருள் + செல்வம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ______________
அ) பொருள்செல்வம் ஆ) பொருள்ச்செல்வம்
இ) பொருட்செல்வம் ஈ) பொருட்ச்செல்வம்
8. அறிவிலர் என்பதன் எதிர்ச்சொல் ______________
அ) அறிவில்லாதவர்ஆ) படிக்காதவர் இ) அறியாதவர் ஈ) அறிவுடையர்
9. மழை பெய்வதற்குக் காரணமாக இருப்பது ______________
அ) வானம் ஆ) பூமி இ) கடல் ஈ) நெருப்பு
10. யானை ______________
அ) கத்தும் ஆ) பிளிறும் இ) கூவும் ஈ) அலறும்

**II. வினை மரபுகளைப் பொருத்துக:** **5 × 1 = 5**

11. நீர் - பறித்தாள்
12. முறுக்கு - எய்தான்
13. உணவு - குடித்தான்
14. அம்பு - தின்றான்
15. பூ - உண்டான்

III. **பழமொழியை நிறைவு செய்க:** 5 × 1 = 5

16. ஆழம் தெரியாமல் ______________ விடாதே.
17. விளையும் ______________ முளையிலே தெரியும்.
18. ஆத்திரக்காரனுக்குப் ______________ மட்டு
19. யானைக்கும் ______________ சறுக்கும்.
20. ஐந்தில் ______________ ஐம்பதில் வளையாது.

IV. **எதிர்ச்சொல் தருக:** 5 × 1 = 5

21. நல்வழி ×
22. நேற்று ×
23. வறுமை ×
24. இம்மை ×
25. வருத்தம் ×

V. **கலைந்துள்ள சொற்களை வரிசைப்படுத்தி எழுதுக:** 5 × 1 = 5

26. தரும் உயர்வு உழைப்பே
27. முதுகெலும்பு விவசாயமே நாட்டின்
28. எள்ளுவர் எல்லோரும் இல்லாரை
29. அல்ல மின்னுவதெல்லாம் பொன்
30. செழித்தால் நாடு காடு செழிக்கும்

VI. **எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** 7 × 2 = 14

31. விடுகதை என்றால் என்ன?
32. மரபு என்றால் என்ன?
33. பாரதிதாசன் எதனை என் உயிர் என்று கூறுகிறார்?
34. நரி, மானை எங்கு அழைத்துச் சென்றது?
35. கொக்கு எதற்காகக் காத்திருக்கிறது?
36. உயிர் காக்கும் நெல்லிக்கனியை யார் யாருக்குக் கொடுத்தார்?
37. களர்நிலத்துக்கு ஒப்பாவர் யார்?
38. சிறுவனின் நேர்மைக்கு கிடைத்த பரிசு யாது?

VII. **கோடிட்ட இடங்களை நிரப்புக:** 6 × 1 = 6

39. முத்தமிழ் என்பது ______________ இசை, நாடகம்.
40. திருக்குறளை இயற்றியவர் ______________
41. தமிழ் பெண்பாற்புலவர் ______________
42. சந்திரனின் மற்றொரு பெயர் ______________
43. ______________ வாழ்ந்தால் கோடி நன்மை
44. ஏறு தழுவுதல் எளிய தமிழில் விரட்டு ______________

VIII. **கடிதம் எழுதுக:** 1 × 5 = 5

45. குடிநீர் வேண்டி விண்ணப்பம் வரைக.

IX. **சொற்றொடரில் அமைத்து எழுதுக:** 5 × 1 = 5

46. மாணவர்கள்
47. வீட்டுப்பாடம்
48. வெற்றி
49. பட்டிமன்றம்
50. உலகம்